மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# சிலப்பதிகாரத்தால் அறியப்படும் கூத்துக்கலை

இரா.அருணா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பி.கே.ஆர் மகளிர் கல்லூரி, கோபிசெட்டியாளையம்

இசைக்கலையுடன் தொடர்புடையது ஆடற்கலை என்னும் கூத்துக்கலை இ/து இசைக்கலையைப் போலவே தொன்மையானது. தொகையறா, பாடல், வசனம் எனும் இம்மூன்று நிலைகளும் கூத்துக்களில் பொதுவாகப் பயின்று வரக் காணலாம் குறிப்பிட்ட இம்மூன்று நிலைகளும் கூத்தாடுபவர்களால் தவிர்க்க இயலாதது. தொகையறா அளவில் கூடியும், பாடல் குறைந்த அளவிலும், வசனம் தொகையறாவை மிஞ்சாத அளவுக்கு இடம் காணலாம். மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ள "பாஞ்சாலி சபதம்" போன்ற கூத்துக்களில் வசனம் கூடுதலாக உள்ளது. இன்று வசனம் அளவில் கூடுதலாக உள்ளமை பரவலாகக் கூத்துக்களில் கண்டுவர முடிகிறது.

கூத்துப் பாடலின் தாளப்போக்கில் அமைதி நடை, அவசரநடை, போன்ற தாளப்போக்குகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகின்றன.

சங்க காலத்தில் கூத்தின் வகைகளையும் ஆட்ட நெறிமுறைகளையும் கூத்தாடும் புலவர் பெருமக்களையும் காணமுடிகிறது. சிவன் ஆடல் வல்லவனாக சங்ககால மக்களுக்குக் காட்சியளித்தார். "பழந்தமிழகத்தில் முதல்நிலை கூத்துக்கள் மர நிழலிலும், குன்றின் உச்சியிலும், கடற்கரை மணலிலும் நிகழ்ந்தன. தெருக்கூத்துக்கள் வீதிகளில், களத்து மேடுகளில் "அல்லது கோயில்களுக்கு அருகிலுள்ள திறந்த வெளி அரங்குகளில் அவ்வப்போது அமைக்கப்பட்ட எளிமையான மேடைகளில் ஆடப்பெற்றன." கூத்து என்பது பொழுது போக்குக்கலை, இன்பக்கலை, அழகுணர்வுக்கலை, காட்சிக்லை, கருத்துக்கலை, நிகழ்கலை ஆகும். " போர் கூத்துகளாக முன்தேர் குரவை, பின்தேர் குரவை, வெற்றிக் குரவை போன்றவை சங்க காலத்தில் நிகழ்த்தப்பட்டன." "கூத்து என்பது இசையுடன் இசைவழி வரும் அசைவியக்கத்துடன் தொடர்புடையது. இசையின் வயதுக்கேற்ப ஆடல் முறையை கொண்டு கூத்து நிகழ்த்தப் பெறகின்றது. கதையின் பொருளுக்கும் சித்தரித்துக் காட்டப்பெறும் உணர்வு நிலைக்கும் ஏற்ப இசையுடன் தாளமும்

பெறும். ஆடுபவரின் அசைவியக்கம் தாளக்கட்டினால் வரையறுக்கப்படுகிறது ” என்று கா.சிவதம்பி கூறுகிறார்.

“கூத்தின் ஒவ்வொரு நிகழ்வும் நிகழ்த்தும் வெளி, நிகழும் வெளி, நிகழும் வெளி என்றும் முரண் சேர்க்கைகளால் பின்னப்பட்டு அமைந்துள்ளது. இதில் நிகழ்த்தும் வெளியானது கூத்தின் கதை நிகழும் காலத்தை குறிப்பாய் உணர்த்தும்”(4) என்கிறார் மு.இராமசாமி.

**சிலப்பதிகாரத்தில் கூத்து**

சிலம்பு காட்டும் நாடக அரங்கம் தெருக்கூத்து, நாடக அரங்கிலிருந்து வளர்ந்தது தான். திரைகளைப் பாத்திர பிரவேசங்களுக்கு முன்பு பிடிப்பது, சிலப்பதிகார கால நாடக அரங்கத்திற்கு முந்திய பழம் கூத்தாகும். சிலம்பில் மாதவி பதினொரு வகையான ஆடல்களை ஆடியுள்ளாள், இவ்வாடல்கள் தெய்வங்களின் பெயரால் ஆடப்பெற்றதினால் இதனைத் ”தெய்வ விருத்தி” என்றனர். சிலப்பதிகாரம் முழுவதும் உரையிடையிட்ட பாட்டுக்களால் ஆகியது. சிலப்பதிகாரத்தில் பொதுவியற் கூத்தும் வேத்தியற் கூத்தும் விரித்துக் கூறப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்திலுள்ள குரவைக் கூத்தும் அவை போன்று கூத்துக்களும் நாட்டிய நாடகங்களாகும் என்று கூறுகிறார். “சிலப்பதிகாரமே தெருக்கூத்துக் கதையாகும் என்று பேராசிரியர் முத்து சண்முகம் கூறுகிறார். ஆகவே சிலப்பதிகாரத்திலும் தெருக்கூத்து ஆடப்பட்டு வந்திருக்கிறது. தாதெரு மன்றத்தில் தெருக்கூத்தின் முன்னோடி வடிவம் ஆடப்பட்டிருக்கிறது.” தெய்வ விருத்தியால் அறியப்படும் முருகன் ஆடிய கூத்து. மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலமாகும். குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். அங்கு வாழும் மக்கள் குறவனும், குறத்தியும் முருகனை வழிபட பல கூத்துக்கள் ஆடி வழிபட்டனர். கூத்தாகும் போது குறிஞ்சி பண்ணையும், தொண்டகப் பறையையும் இசைத்து மகிழ்ந்தனர்.

குறிஞ்சி நில மக்கள் கடவுளாக வணங்குகிற முருகப் பெருமானே ஆடிய கூத்தாக சிலப்பதிகாரம் கூறுவதை அறியமுடிகிறது.

“வேலன் வெறியாட்டு” நிகழ்ச்சி கூத்துவழி நிகழ்த்தப்பட்ட ஒரு வழிபாடே ஆகும்.

“மயிலின் ஆடலிலும், மானின் துள்ளலிலும் மனதைப் பறிகொடுத்து சிறந்த

பொழுது போக்கும் கலையாக ஆடற்கலையைப் படைக்கத் தூண்டியிருக்க வேண்டும்.”

இதன் மூலம் முருகன் ஆடிய கூத்திற்கான காரணம் அறிய முடிகிறது.

**துடிக்கூத்து**

முருகன் சூரபத்மனை வென்றவுடன் துடிகொட்டி ஆடிய கூத்து துடியாகும்.

“துடிப்பாடல் வேல்முருக னாடல் அதனுக்கு
ஒடியா வுறுப் போரைந்தாம்”

**குடைக்கூத்து**

அரக்கர்கள் தன் படைக்கலன்களை இழந்து வருந்தும் போது முருகன் தன் வெண்கொற்றக் குடையைச் சாய்த்து ஆடிய கூத்து குடைக்கூத்தாகும். இது இன்று காவடியாடுதல் என்னும் பெயரில் உள்ளது.

"அறுமுகத்தோனாடல் குடைமற்றதற்குப்
பெறுமுறுப்பு நான்கா மெனல்."(9)

முருகன் ஆடிய இவ்விரு வகைக் கூத்துக்களும் அவன் வெற்றிக்களிப்பில் ஆடியவையாகும்.

**திருமால் ஆடியக்கூத்து**

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். இந்நில தெய்வமாக போற்றப்படுபவர் திருமால். இந்நில மக்களான ஆயன், ஆய்ச்சியர் ஏறு கோட்பறை கொண்டு ஆடி முல்லைப்பண் கொண்டு இசைத்து கூத்தை ஆடி மகிழ்ந்தனர். திருமாலின் பத்து அவதாரங்களும் சிலம்பில் கூர்மம், வாமணம், இராமன், பலராமன், கிருஷ்ணன் ஆகிய ஐந்து அவதாரங்கள் சிறப்பாகப் பேசப்படுகிறது.

**அல்லியக்கூத்து**

கண்ணன் அவதாரத்தில் கம்சனின் வஞ்சத்தினால் வந்த யானையின் மருப்பை அழித்து கண்ணன் ஆடிய ஆடல் அல்லியத் தொகுதி ஆகும்.

"கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்
அல்லியத் தொகுதியும் அவுணற் கடந்த"

**குடக்கூத்து**

காமன் மகன் அநிருத்தனைக் காக்கக் கண்ணன் "சோ" என்னும் நகரில் குடத்தைத் தலையில் வைத்தாடியது குடக்கூத்து ஆகும்.

"வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணிலம் அளந்தோம் ஆடிய குடமும்"

மாதவி இந்திர விழாவில் திருமாலின் இக்கூத்து வகைகளை ஆடிச்சிறத்தாள்.

**கொற்றவை ஆடிய கூத்து**

மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை நிலமாகும். இந்நில மக்களான மறவன், மறத்தியரும் ஆவர். இவர்கள் வழிபடும் தெய்வம் கொற்றவை. துடிப்பறை கொண்டு, பாலை யாழ் மீட்டி, பஞ்சுரப் பண் இசைத்து கூத்து ஆடுவர்.

**மரக்கால் கூத்து**

அவுணர்களுடன் தேவி போராடியபோது அவர்களின் வஞ்சத்தால் தேள், பாம்பு முதலியன வந்தன. அவற்றை விரட்டுவதற்காக மரத்தால் ஆகின கால்களுடன் கொற்றவை ஆடிய ஆடலே மரக்காலாடல் கூத்து ஆகும்.

"காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாஅள்
மாயவள் ஆடிய மரக்காலாடலும் "

என்னும் இந்திர விழாவில் மாதவி ஆடிய ஆடல்களில் இதுவும் ஒன்றாகும்.

**பாவைக்கூத்து**

அவுணர் வெவ்விய போர்க்கோலம் ஒழிய, செந்நிறமுடைய திருமகள் கொல்லிப்பாவை வடிவாய் ஆடியது பாவைக் கூத்து ஆகும்.

"செருவெங்கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும் "

**கூத்தின் இன்றைய நிலை**

நாட்டுப்புற நடனமாகவும், நாட்டுப்புற நாடகங்களுள் சடங்கு வயப்பட்ட நாடகமாகவும் கூத்து இக்காலத்தில் அமைந்துள்ளது. "தமிழ்க்கூத்து அரங்கு இன்னும் சடங்கு நிலையிலிருந்து விடுபடவில்லை." கூத்து குழந்தைகளுக்கு விளையாட்டாகவும், இளைஞர்கள் களியாட்டமாகவும், முதியோர்க்கு சேவையாட்டமாகவும், சடங்காட்டமாகவும் இக்காலத்தில் அமைந்துள்ளது. பண்பாடு கலைகளின் மூலம் தனது உயர்வினை வெளிப்படுத்திக் கொள்கிறது. அந்த நிலையிலேயே சமூகத்தின் படைப்பியல் உந்துதலும், படைப்பியல் வன்னையும் அழகியல், தொடர்பியல் முறைகளும் இணைகின்றன. பண்பாட்டின் வேர்களைத் தேடினால் அதை மரபில்தான் இணைகின்றன. எனவே தான் சிலப்பதிகாரத்தில் அறியப்படும் கூத்துக்கலையைப் பற்றி தெளிவாக விளக்க இக்கட்டுரை அமைக்கப்பட்டது.